**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2019**

**C021 இலக்கணம் – 1 (எழுத்து)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பவணந்தி முனிவர் எழுதிய இலக்கண நூலின் பெயர் என்ன?
2. புறவினா என்றால் என்ன?
3. கேண்மியா என்பது எவ்வகைக் குற்றியலிகரம்?
4. வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் எத்தனை மெய்யெழுத்துகள் வரும்?
5. அ, ஆ என்னும் இரண்டு உயிர் எழுத்துகளும் எவ்வாறு பிறக்கின்றன?
6. ஐ, ஔ இரண்டையும் மொழிநூலார் எவ்வாறு சுட்டுகின்றனர்?
7. நன்னூலார் கூறும் ஓரெழுத்து ஒரு மொழிகள் எத்தனை?
8. அல்வழிப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்?
9. சொல்லின் ஈற்றிலே வரும் மூன்று வினா எழுத்துகள் எவை?
10. அகர ஈற்றுப் பெயரெச்சத்திற்கு முன் வரும் வல்லினம் எவ்வாறு வரும்?
11. புணர்ச்சியில் முதல் குறில் நெடிலாக நீளும் எண்ணுப் பெயர்கள் யாவை?
12. நன்னூலார் கூறும் விகுதிகள் எத்தனை?
13. குளம் முன் வரும் கரை என்னும் சொல் எவ்வாறு புணரும்?
14. பெயர்ச்சொல்லுக்குப் பின்னால் வரும் ஐ உருபு தரும் பொருள் யாது?
15. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன் வல்லினம் மிகுமா?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. வினா எழுத்துகள் குறித்து விளக்குக.
2. ஈறொற்று மயக்கம் என்றால் என்ன? விளக்குக,
3. உயிர் எழுத்துகளின் பிறப்பினைத் தொல்காப்பியம் வழிநின்று விளக்குக.
4. பகுபத உறுப்புகள் குறித்து எழுதுக.
5. செய்யுள் விகாரங்கள் குறித்து எடுத்துரைக்க.
6. திசைப்பெயர்ப் புணர்ச்சி குறித்து விவரித்துரைக்க.
7. உருபுப் புணர்ச்சி என்றால் என்ன? எடுத்துரைக்க.
8. யகர, ரகர, ழகர ஈற்றுப் புணர்ச்சியின் பொதுவிதிகளை விளக்குக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) சார்பெழுத்துகளின் வகைகளை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) மொழி முதல் எழுத்துகள் குறித்துக் கட்டுரை வரைக.

2. (அ) உயிர் எழுத்துகளின் பிறப்பு குறித்துத் தொல்காப்பியம், நன்னூல் வழி விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) பகுபதம் குறித்தும் அதன் வகைகள் குறித்தும் கட்டுரையொன்றை வரைக.

3. (அ) வல்லினம் மிகா இடங்கள் குறித்துச் சான்றுகள் தந்து விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.

❋ ❋ ❋